DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
O.S.No.282/2018
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : ராதாகிருஷ்ணன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 12.08.2022 |

Solemnly affirmed by Thiru.S.Chandra Sekar, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் சிவகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் வேலையில்லாமல் சும்மாதான் உள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் வாதி தரப்பு 3ம் சாட்சி ஆவேன். என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **சா,சா.2 ஆகும்.** 04.04.2018ல் இரவு சுமார் 08,00 , 08.30 மணியளவில் பிரதிவாதி உஷா புரோநோட்டு எழுத வேண்டும் என்று அழைத்து என்னை குருசாமி வீட்டிற்கு கூட்டி சென்றார். அங்கு புரோநோட்டு எழுதினார்கள். புரோநோட்டினை ரூ 3லட்சத்திற்கு எழுத சொன்னார்கள் நான் தான் அந்த புரோநோட்டினை எழுதினேன். அதில் கணேசன் மற்றம் சுந்தரவேல் சாட்சி கையொப்பம் செய்தனர் பின்னர் 3வதாக நான் அந்த புரோநோட்டில் கையொப்பம் செய்தேன். அதன் பின்னர் அந்த புரோநோட்டினை பிரதிவாதியிடம் கொடுக்க பிரதிவாதி அதில் கையொப்பம் செய்தார். பின்னர் அந்த புரோநோட்டினை வாதியிடம் கொடுத்தார். பின்னர் வாதி அந்த புரேநோட்டினை பெற்றுக்கொண்டு ரூ

3லட்சத்தினை பிரதிவாதியிடம் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டு நான் எழுதியது தான். அதில் உள்ள வரைவாளர் கையொப்பம் என்னுடையது தான்.

**பிரதிவாதி தரப்பில் யாதொரு பிரதிநிதித்துவமும் இல்லாததல் கு.வி முடிக்கப்படுகிறது.**